THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

MAY, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

மே, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
2П தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்.

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்
3. பிரசங்கக் குறிப்புகள்
4. சிறுவர் பாகம்.
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. தெ. இ. ச. கையாடவேண்டிய புதிய ஒழுங்கு.
7. கி.மு. சங்கப்பொருட்கள்
8. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV பசுமலை, மே 1954 இலக்கம் 7

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை,
மே 1, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

பரிசுத்த ஆவியின் திருநாள் இந்த வருடம் ஜூன் 6வ ஞாயிற்றுக்கிழமையில் வருகிறது அன்று மதுரை திவ்ய பொறுமையின் ஆலயக் குருவாக கனம் ரிச்சர்டு ராஸ் அவர்கள் அபிஷேகம் செய்யப்படுவார்கள். அதன்பின் பெங்களூர் வேதசாஸ்திரக் கல்லூரியில் சிலகாலம் பயிற்சிபெற்று மறுபடியும இந்தச் சபையில் ஊழியம செய்யத் திரும்புவார். அவருக்காக தயவுசெய்து ஜெபியுங்கள்.

காலம்சென்ற கனம் தாமஸ் ராக்லாண்டு ஐயர் சிவகாசி வட்டகையில் ஊழியம் நடத்தி நூறு ஆண்டுகளாகின்றன. இந்த நூற்றாண்டுக் கொண்டாட்டம் சிவகாசியில் ஜூன்மீ 16—18வ களில் நடைபெறும். கனம் தாமஸ் ராக்லாண்டு ஐயர் ஒரு சிறந்த அறிவாளியாகவும், மிஷனெரியாகவும, பக்திமானாகவும விளங்கினார். சுவிசேஷத்தின் அனல் மூண்டவராய் அந்த வட்டகையில் திருச்சபையின் அஸ்திபாரத்தை நாட்டி கொஞ்சக்காலம் திருப்பணிவிடையாற்றியபின் சிவகாசியிலேயே மரணமானார். நூறு ஆண்டுகளுக்குப் பின் ஞாபகார்த்தமாக அவரைக் கனப்படுத்துவது உசிதமானதே. அத்தியக்ஷாதீனத்தின் பல பாகங்களிலிருந்தும் அநேகர் இக் கொண்டாட்டத்திற்கு வருவார்களென எதிர்பார்க்கிறேன்.

அத்தியட்சாதீனத்தின் சபை ஊழியத்திற்காக அமெரிக்கன் போர்டார் கனம் என்சையின் ஐயரையும் அம்மாளையும் இரு புதிய மிஷனரிமாராக அனுப்புகிறதற்காக சந்தோஷப்படுகிறேன். அக்டோபர் மாதம் அவர்கள் இங்கு வருவார்களென எதிர்பார்க்கிறேன். கனம் ப்ரௌன் அம்மாளும், கனம் டாக்டர் ரிக்ஸ் ஐயரும், அம்மாளும் வருகிற அக்டோபர் மாதம் நம் மத்தியிலிருப்பார்களெனவும் எதிர்பார்க்கிறேன். கனம் ப்ரௌன் அம்மாள் இரட்சண்ய புரத்தில் ஊழியம் செய்வார்கள் கனம் டாக்டர் ரிக்ஸ் ஐயரும் அம்மாளும் சிலகாலம் பெங்களூர் சென்று தமிழ் படிப்பார்கள்.

ஜூன் 6உ வருகிற பரிசுத்தாவியின் திருநாளை ஆசரிக்க நீங்கள் யாவரும கூடுமானவரை ஆயத்தப்பட்டு வருவீர்களென நம்பு கிறேன் இந்தத் திருநாள் ஏறக்குறைய மறக்கப்பட்டு வருவதே நமது சபையின் பெரிய பெலவீனம். சபையின் திருநாட்களில் கிறிஸ்து ஜயந்தி, பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த திருநாள், பரிசுத்த ஆவியின் திருநாள் ஆகிய நான்கு திருநாட்கள் முக்கியமானவை. முதல் மூன்று தினங்களும் எல்லாக் காலங்களிலும் பக்திவினயத் தோடு கொண்டாடப்படுகிறது நான்காவது நாள் அடிக்கடி அசட்டை செய்யப்படுகிறது "இந்த சபை பரிசுத்தாவியை நம்பு கிறதில்லையா" என்ற கேள்வியை சில வேளைகளில் யாதாமொருவர் கேட்கவேண்டியதிருக்கிறது. பரிசுத்தாவியின் திருநாளுக்கு முன் ஒருமுறை நீங்கள் அப்போஸ்தலர் நடபடிகள், 1 கொரிந்தியர் 12-14, ரோமர் 8, கலாத்தியர் 5 : 16-26 முதலிய வேத பாகங்களை வாசிக்கும்படி ஆலோசனை கூறுகிறேன். விசேஷமாய் ரோமர் 8 : 9-ம வசனத்தின் கடைசி பாகத்தை நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்கும்படி கேட்கிறேன்

மே 3-16, 21—ஜூன் 5உ களில் கொடைக்கானலிலிருப்பேன். இந்த மீ த்தில் உங்கள் யாவருக்கும் நல்ல இளைப்பாறுதலும் முசிப் பாறுதலும் கிடைக்குமென நம்புகிறேன்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

திருச்சபைச் செய்திகள்

1 சபையின் திருநாட்கள்.

ஜூன் 6உ பரிசுத்த ஆவியின் திருநாள்
11உ பரி. பர்னபாவின் திருநாள்
13உ திருத்துவத் திருநாள்
20உ திரி. திரு. பின் ஞாயிறு 1
24உ பரி. யோவான் ஸ்நானகனின் திருநாள்
27உ திரி. திரு பின் ஞாயிறு 2
29உ பரி பேதுருவின் திருநாள்.

---

2. "தெய்வீக அன்பு" என்ற நமதருள்நாதரின் சரிதம் பசுமலைச் சபையாரால் இந்த வருடம் மும்முறை நடித்துக்காட்டப்பட்டது. ஒவ்வொரு முறையும் ஆயிரக்கணக்கான மக்கள் அதைக் கண்டு பரவசமடைந்தனர்.

3. ஞானபோத ஸ்தாபனக் கூட்டங்கள். இந்த ஆண்டில் எழு லோக்கல் கவுன்சில்களில் நடைபெற்றது. வழக்கம்போல் தேவ ஊழியரும் சுயேட்சை ஊழியரும் இக் கூட்டங்களுக்கு வந்திருந்தனர். விசேஷமாய் மத்திய லோக்கல் கவுன்சில் கூட்டங்களில் நமது ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிகிட்சை ஊழியம் கிறிஸ்தவ ஊழியத்தின் ஓர் பங்கு என்பதை உபந்நியாசங்கள் மூலமாகவும் உபகாரணங்கள் மூலமாகவும் செய்து காட்டினர். முக்கியமாய் கிராம சுத்தம், சுகாதாரம், ஆகாரம், வியாதிகள் தடுப்புமுறை முதலியவற்றைப்பற்றி அக்கரை எடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

4. செஸ்டர் நேசகரம் ஞாபகார்த்த ஓய்வுநாள் பள்ளிக்கூட பரிசு அளிப்பு விழா – திண்டுக்கல்.

குருத்தோலை ஞாயிறு (11—4—54) பின்னேரம் 4 மணிக்கு மேற்படி விழா, ஸ்தல குரு அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. ஸ்தலத்திலுள்ள 3 ஓய்வுநாள் பாடசாலைகளும், ஏறக்குறைய 400 பிள்ளைகளும் இதில் கலந்துகொண்டனர். அங்கத்தினர் விசேஷித்த பாடல்களும், அபிநயங்களும் செய்தனர். ஓய்வுநாள் பாடசாலைகளின் சூப்பிரண்டு ஸ்ரீமான் ஜான் பொன்னையா அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தனர். I. S. S. U. பரீட்சைக்கு சென்ற மாணவர்களில் 26 பேர் பத்திரங்கள் பெற்றனர். பள்ளிகளை நடத்த வெளியேயிருந்து சுயேட்சை ஊழியர் இன்னும் அதிகமாக வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

விழாவின் உச்சநிலை, செஸ்டர் நேசகரம் உருவப் படத்திறப்பு. இந்த கைங்கரியத்தை வடகவுன்சில் தலைவர் செய்து வைத்துப் பேசுகையில், ஓய்வுநாள் பாடசாலை மாணவர்கள் செஸ்டர் நேசகரமவர்களிடத்தில் காணப்பட்ட, பக்தி, ஆலயவாஞ்சை, அமைதல் முதலிய நற்குணங்களை மாதிரியாக வைத்து ஜீவிக்கும்படி ஏவினர். பின்னர் ஏறக்குறைய 40 பரிசுகளும் 26 பத்திரங்களும் ஓய்வுநாள் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

பிரசங்கக் குறிப்புகள்

மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள உறவு.

ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார் — ஆதி. 5 : 24
நோவா தேவனோடு ஒத்துழைத்தார் — ஆதி. 6 : 22

சிமியோன் கர்த்தருக்காக காத்திருந்தார்— லூக். 2 : 25
சிறுமி கடவுளைப்பற்றி சாட்சிகொடுத்தாள்—II ராஜா. 5 : 2,3
தாவீது கடவுளின் வீரனாயிருந்தார்—I சாமு. 17 : 32, 36
மொர்தேகாய் கடவுளுக்காக காவல் வேலை செய்தார்
—எஸ்தர் 2 : 21
பவுல் கடவுளது எச்சரிப்பின் ஊழியம் செய்தார்
அப். 20 : 31
எஸ்ரு கடவுள் எழுத்தாளனாயிருந்தார்—நெகே 8 : 4
யாக்கோபு கடவுளோடு போராடினார்—ஆதி 32 : 24
நேகேமியா கடவுளுக்காக அழுதார்—நெ. 1 : 4
நீ என்ன செய்கிறாய்.

சிறுவர் பாகம்

(கனம் தனம் காபிரியேல் அம்மாள், மதுரை.)

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." (II கொரி. 3 : 18)

சகல நற்குணங்களும் நிறைந்த ஒரு அடிமைப் பிள்ளை ஒரு வீட்டிலே வளர்க்கப்பட்டு வந்தாள் சுத்தம், சுறுசுறுப்பு, கீழ்ப்படிதல் முதலிய குணங்கள் அவளுக்கிருந்ததால் வீட்டின் எஜமானும், எஜமாட்டியும் அவள்மேல் பிரியமாய் இருந்தார்கள். ஆனால் அந்த அடிமைப் பெண் சின்ன வயதிலேயே மரித்துப்போனாள். அவளை அதிகமாய் நேசித்த எஜமான் எஜமாட்டி அவளைப்போல ஒரு சிலை செய்து, யாவரும் பார்க்கத்தக்க ஒரு இடத்தில் நாட்டிவைத்தார்கள்.

அதிக காலங்களுக்குப் பிறகு அந்தப் பட்டணத்தின் தெருக்களில் ஒரு பிச்சைக்காரப்பிள்ளை, பிச்சைக்காக அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்து கடைசியாக அந்த அடிமைப் பிள்ளையின் சிலையண்டை வந்துசேர்ந்தது. அந்தச் சிலையைப் பார்த்தவுடன், தன்னைப்போல ஒரு சின்னப் பிள்ளையின் சிலையாயிருந்தபடியால் அந்தச் சிலையைப் பார்த்தபடியே வெகுநேரம் நின்றுகொண்டிருந்தாள். பின்பு அங்கு உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு ஆளிடம் அந்தச் சிலையைப்பற்றி விசாரித்தாள். அது ஒரு அடிமைப்பிள்ளையின் சிலை என்று அந்த ஆள் அவளுக்குச் சொன்னான். அந்தப் பிச்சைக்காரப்பிள்ளை இன்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு ஒரு வேலைக்காரப்பிள்ளை இப்படிச் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கக்கூடுமா?

என்று தனக்குள் யோசித்துக்கொண்டு நின்று, வீட்டுக்குப் போய்விட்டாள். அடுத்த நாள் காலையில் திரும்பவும் அந்தச் சிலையண்டை வந்து நின்று அதையே கூர்ந்து கவனித்தாள், கடைத் தெருக்களில் மாட்டியிருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியண்டைபோய் நின்று தன்னைப் பார்த்தாள். தன் தலைக்கு எண்ணெய் போட்டு அந்த அடிமைப்பிள்ளையைப்போல தனது தலையையும் அழகாகச் சீவிக்கொண்டாள் முகத்தை நன்றாய்க் கழுவினாள். அடிக்கடி அந்தச் சிலையைப் பார்ப்பதும் திரும்ப அந்தக் கண்ணாடி முன் நின்று தன்னைச் சரிப்படுத்துவதுமாக இருந்தாள். தினமும் பிச்சை எடுத்த பின் அந்தச் சிலையை நன்றாய்க் கவனித்து, பின் தன்னுடைய குறை என்ன என்பதை கண்ணாடி முன் நின்று கண்டுபிடித்து உடனே அதைத் திருத்திக்கொள்ளுவாள். தனது உடுப்பை நன்றாய்த் துவைத்து உடுத்திக்கொள்ளுவாள். இவ்விதமாக அவள் பிரயாசப்பட்டதினால் சில நாட்களுக்குப் பிறகு அந்தச் சிலையிலுள்ள அடிமைப்பிள்ளைக்கும் இந்தப் பிள்ளைக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. இவளைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு "இவள் யார்? அந்தச் சிலையிலுள்ள பிள்ளைதான் உயிரோடே வந்துவிட்டாளோ" என்று எண்ணினார்கள் அநேகர் இவளை நேசிக்கவும், இவளுக்கு உதவிசெய்யவும் விரும்பினார்கள்.

அந்தப் பிச்சைக்காரப்பிள்ளை அந்தவிதமாகத் தன்னை அந்த அடிமைப்பிள்ளையைப்போல ஆக்கிக்கொள்ளுவதற்கு ஒரு சாதாரணக் கண்ணாடிதான் உதவி செய்தது. ஒரு சாதாரணக் கண்ணாடி நமது வீடுகளிலும் நமக்கு அவ்விதமே அதிக உதவியாயிருக்கிறதென்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம் கண்ணாடியைப் பார்த்து நமது முகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறோம். தலைமுடியை ஒழுங்காகச் சீவிக்கொள்ளுகிறோம் உடுத்திக்கொள்ளுகிறோம் இவ்விதமாகத் தினந்தோறும் நம்மைச் சரிப்படுத்திக்கொள்ளுவதற்கு ஒரு கண்ணாடி அதிக அவசியம் அல்லவா? இந்தச் சாதாரணக் கண்ணாடி நமது சொந்தச் சரீரத்தைச் சரிப்படுத்த உதவி செய்யும்.

இன்னொரு அற்புதக் கண்ணாடி உண்டு. அதிலே நாம் உற்றுப் பார்த்தால் நமது உருவம் தெரிவதோடு இன்னொரு அழகிய உருவமும் தெரியும் அவருக்குப் பிரகாசம் பொருந்திய முகம் உண்டு அவருடைய பார்வை மிகவும் அருமையாயிருக்கும். அவருடைய அன்பின் கரங்கள் நம்மை அணைத்துக்கொள்ள நீட்டப்பட்டிருக்கும் அவரைப்போல நம்மையும் மறுரூபப்படுத்திக்கொள்ள நாம் அந்தக் கண்ணாடியை அடிக்கடி உற்றுப் பார்க்கவேண்டும்: அவருடைய முகத்தைப்போல நம்முடைய முகம் ஆகக்கூடுமா? அவருடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நமது காதுகளுக்கு

இனிமையாயிருக்கும் நாமும் அவரைப்போல பேசிப் பழகவேண்டும். நம்முடைய கால்கள் அவருடைய கால்களைப்போல மற்றவர்களுக்கு உதவிசெய்ய நடந்து பழகவேண்டும். அந்தப் பிச்சைக் காரப்பிள்ளை எவ்விதமாகத் தன்னை ஒரு கண்ணாடிக்குமுன் நின்று பார்த்து, அந்த அடிமைப்பிள்ளையின் முகரூபத்தைத் தானும் அடைய விரும்பினதோ அவ்வாறே நாமும் அந்த அற்புதக் கண்ணாடிக்கு முன் நின்று ஒரு நாள் அல்ல, அல்லது ஒருவாரம், ஒருமாதம், ஒரு வருஷமல்ல நமது ஜீவியகால முழுவதும் அந்தக் கண்ணாடிக்கு முன் நின்று அந்த அன்பின் முகத்தைப் பார்த்துப் பார்த்து நமது சாயல் அதற்கொப்பாக இருக்கிறதா என்பதை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்

அந்த விநோதக் கண்ணாடி உங்களிடத்தில் இருக்கிறதா? அதை எப்போதாவது உங்கள் முன் நிறுத்தி அதைப் பார்த்திருக்கிறீர்களா? அது உங்களுக்கு மிகவும் அவசியம். நாமெல்லாரும் அசுத்தமான பிள்ளைகள் நமது முகத்திலே அழகில்லை. நம்முடைய கண்கள் இருள் அடைந்திருக்கின்றன. அதனால் அந்தக் கண்ணாடியைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். அந்தக் கண்ணாடி உங்களிடத்தில் இல்லாவிட்டால் உடனே வாங்குங்கள். அதை அடிக்கடி உற்றுப் பாருங்கள்.

அந்தக் கண்ணாடி எது என்று நினைக்கிறீர்கள்? "வேத புத்தகம்" தான் அந்தக் கண்ணாடி. அதிலே நாம் காணும் ரூபம் நமது அருமை இரட்சகர் "இயேசுகிறிஸ்து". நாமெல்லாரும் அவருடைய பிள்ளைகள் அவருடைய சாயலிலே பிறக்கவேண்டியவர்கள், நாம் தினமும் அவரை அந்தக் கண்ணாடியிலே கண்டு அவரைப்போல ஆகவேண்டும்.

அப்பொழுது, "அவர் .. .. நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். (பிலிப். 3:21)

இயேசுவின் ஜெபப்பள்ளி.

ஏழாம் பாடம்

பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?

அல்லது

சருவ சம்பத்தும் தரும் ஈவு.

'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' (லூக். 11:13)

பரி மத்தேயு ஏழாம் அதிகாரம் பதினோராம் வசனத்திற்கும்; பரி. லூக்கா பதினோராம் அதிகாரம் பதிமூன்றும் வசனத்திற்கும் வேறுபாடுண்டு. மத்தேயு சுவிசேஷத்தில் ஆண்டவர் நல்ல ஈவுகளை கொடுப்பதுபற்றிப் பேசுகிறார். ஆனால் பரி. லூக்கா சுவிசேஷத்தில் பரமபிதாவானவர் பரிசுத்த ஆவியை அருள்வது அதிக நிச்சயம் அல்லவா? என்று கூறுகிறார் இவ்விதமாத கொடைகளிலெல்லாம் பிரதானமானதும் உத்தமமானதுமான கொடை பரிசுத்த ஆவியாகிய கோடையே என்று போதிக்கிறார். ஏனெனில் அக்கொடையில் சருவ ஈவுகளும் அடங்கும் எனவே பரிசுத்த ஆவியாகிய ஒப்பற்ற கொடையைக் கடவுளிடம் நாடித்தேடுவதே நமது தலைசிறந்த கடன்.

இந்தச் சொல்லொண்ணாத ஈவினைக் குறித்து நாம் எளிதில் உணரலாம் பரிசுத்த ஆவி பரமபிதாவின் வாக்கு என்றார் நமதாண்டவர். அவ்வாக்கில் கடவுளின் பிதாத்துவம் வெளிப்படுத்தப்படுகிறது. உலகில் ஒரு ஞானமுள்ள தகப்பன் தன் பிள்ளைக்குத் தன் சொந்த ஆவியைக் கொடுப்பதே உத்தம நன்கொடையாகும். தனது குண சீலங்களைத் தன் பிள்ளையில் வளரச்செய்வதே கல்வி புகட்டும் தந்தையின் நோக்கம். தன் சேயை; 'அவையத்து முந்தியிருப்பச் செய்வதே' தந்தையின் கடன் என்றார் வள்ளுவர். ஆனால் ஆண்டவர் கருத்து, அதனினும் சிறந்தது. ஒரு குழந்தையானது தன் தந்தையை அறியவேண்டுமானால், அவன் முதிர்ச்சியடையும்போது, தந்தையின் சித்தத்தையும், வேலைத் திட்டத்தையும், உணரவேண்டுமானால், அவனது தந்தையில் அளவற்ற ஆனந்தம் காணவேண்டுமானால், சூரியன் தாவரத்திற்குள்ளும், தாவரம் சூரியனுக்குள்ளும் இருப்பதுபோல தந்தை தனையனுக்குள்ளும், தனையன் தந்தைக்குள்ளும் விளங்க வேண்டுமானால், அவன் தந்தையோடு ஒரே மனமும, ஒரே ஆவியும் படைததவனாயிருத்தல் வேண்டும். அவ்விதமே கடவுள் தம் ஆவியைத் தம் பிள்ளைக்கு அருள்வதைப் பார்க்கிலும் சிறந்ததோர் நன்கொடை எதுவுமே இல்லை. பரிசுத்த ஆவியே கடவுள். கடவுளின் உயிரே ஆவி. இப்பொழுது உலகிலுள்ள தம் பிள்ளையொருவனுக்கு தமது ஆவியையே கடவுள் அருள்வது என்பதன் கருத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவும்.

இயேசுவின் உலக வாழ்வில், அவரது மகிமைக்குக் காரணமாயிருந்தது அவரிலிருந்த கடவுளின் ஆவியல்லவா? யோர்தான் நதியில் அவர் ஞானமுழுக்குப் பெற்றபோது, 'இவரே என் நேசசுதன்' என்ற சத்தமும், அவர்மீது இறங்கின பரிசுத்தாவியும் ஒன்றாயிணைக்கப்பட்டனவன்றோ? அப்படியே பரி. பவுல் அப்போஸ்தலனும் 'நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே' என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவி

யைப் பெற்றீர்கள்' என்கிறுர். (ரோமர் 8 : 15) ஓர் அரசன் தன் பிள்ளையின் கல்வியில் ஒரு இராஜரீக ஆவியமையும்படியே நாடு கிறுன். அப்படியே நமது பரம பிதா, தமது பிள்ளைகளைப் பரிசுத்தத்திலும், தெய்வீக வாழ்விலும் பயிற்றுவிக்குமாறு, தமது இருதயத்தின் ஆழத்திலிருந்து அவரது ஆவியை அருளிப் பயிற்றுவிக்கிறுர். இயேசு தமது இரத்தத்தால் பிராயச்சித்தம் செய்து தீர்த்த பிறகு, கடவுள் திருச்சமுகத்துள்பிரவேசித்து, நமக்காக வேண்டுதல்செய்து பரிசுத்தாவி நம்மில் வசிக்குமாறு, அவரை அனுப்புவதே அவரது முழு நோக்கமாயிருந்தது. இதுபற்றி பரி. யோவான் எழுதிய சுவிசேஷம் பதினைும் அதிகாரத்தில் 7-ம 8-ம் வசனங்களைத் தியானிக்கவும் பரிசுத்த ஆவி, பிதாவினேடும் குமாரனேடும் ஐக்கியப் படும்படி நம்மை வழி நடத்துகிறது பிதாவின் ஆவியாக பரம பிதாவின் அன்பில் நமது இதயம் மகிழவும் அதிலேயே ஜீவிக்கவும் பரிசுத்த ஆவி உதவுகிறுர். குமாரனின் ஆவியாக, குமாரனனவர் உலக வாழ்வில் ஜீவித்தது போலவே, நாமும் சிறுபிள்ளை போன்ற உரிமையிலும், தியானத்திலும், கீழ்ப்படிதலிலும் நாம் வளர நம்மீது ஆவியை ஊதுகிறுர். எனவே கடவுள் தமது பரிசுத்த ஆவியை அருளுவதிலும் மேலான நன்கொடை கிடையாது என்பதை உணர்க.

இதன்மூலம் நாம் அறிவது யாதெனில், பரிசுத்த ஆவியைப் பெறுவதே நமது ஜெபத்தின் பிரதான நோக்கமாயிருக்கவேண்டுமென்பதே ஆத்மீக வாழ்க்கையின் ஒவ்வொரு தேவைக்கும் பரிசுத்த ஆவியே தேவை. எல்லா நிறைவும் இயேசுவில் உண்டு. கிருபையின் நிறைவும சத்தியத்தின் நிறைவும் இயேசுவில்தான் உண்டு. அவற்றிலிருந்தே கிருபையின்மேல் கிருபையைப் பெறுகிறேம் 'எல்லாம் இயேசுவே – எனக் – கெல்லாம் இயேசுவே' என்று பாடுவோமாக. யோவான் 14 : 26 ; 16 : 8-11, 13-14, முதலியவற்றை வாசித்து, பரிசுத்த ஆவியின் கிரியைகளை உய்த்துணர்க. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான வாழ்க்கையின் ஆவியே அவர். பரிசுத்த ஆவியால் நாம் நடத்தப்பட நம்மை ஒப்புக்கொடுப்போமாயின், கிறிஸ்துவின் வாழ்க்கையை நம்மில் தோற்றுவிப்பார் அவர். அப்போது எவரும் நம்மிலே கிறிஸ்துவைக் காண்பார். நம்மைப் பிதாவண்டை சேரச்செய்யும் ஒரே ஒரு ஜெபமிருக்குமானல் அந்த ஜெபம் பரிசுத்த ஆவியைப் பெறநாடும் ஜெபமேயாகும்.

பரிசுத்த ஆவியானவர் அருளும் பல்வேறு ஈவுகளில் விசுவாசியின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்கிறுர். அவரது பல்வேறு நாமங்களையும் சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் சகல கிருபைகளையும் வெளிப்படுத்தி அவற்றை அடியாருக்கருள்வதால் அவருக்குக் கிருபையின் ஆவி என்று பெயர். நமது விசுவாசத்தைத் துவக்கி அதிலே நாம் வளரும்படி அவர் அருள்வதால், அவ

ருக்கு விசுவாசத்தின் ஆவி என்று பெயர். நம்புகிற, நம்பிக்கையுள்ள 'அப்பாபிதா, நம்முள்ளிருக்க நமக்கருள்புரிந்து நமக்கத்தாட்சியாக யிருப்பதால் அவருக்கு சுவிகார ஆவி என்று பெயர். நமது சிந்தையிலும, சொல்லிலும், செயலிலும், சத்தியத்திலும், கடவுளுடைய ஒவ்வொரு திருவார்த்தையையும நிறைவேற்றி, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவதால் அவருக்குச் சத்தியத்தின் ஆவி என்று பெயர் நமது ஜெபம் கேட்கப்படும்படி பரிசுத்த ஆவி மூலம் பரமபிதாவினிடம் நாம் பேசுவதால் அவருக்கு ஜெபத்தின் ஆவி என்று பெயர். நமது இருதயங்களை ஆராய்ந்து நமது பாவங்களை உணர்த்துவதால் அவருக்கு வாஞக்கினி என்றும், நியாயத்தீர்ப்பின் ஆவி என்றும் பெயர். நமக்குள் பரமபிதாவின் பரிசுத்த பிரசன்னத்தை நமக்கு வெளிப்படுத்தி அருள்வதால் அவருக்குப் பரிசுத்தத்தின் ஆவி என்று பெயர். பரமபிதாவின் திருப்பணியைச் செவ்வனே செய்ய நமக்கு வல்லமை அருள்வதால் அவருக்கு வல்லமையின் ஆவி என்று பெயர். வான மகிமைக்குள் நாம் பிரவேசிக்க நம்மை ஆயத்தம செய்வதால் அவருக்கு மகிமையின் ஆவி என்றும் நமது சுதந்திரத்தின் வாக்கு என்றும் பெயர். கடவுளுடைய பிள்ளைக்குத் தேவையானது ஒன்றே. அது கடவுளுடைய பிள்ளையாய் வாழும் திறமை பெறுவதேயாகும். அப்படியானல் நாம பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவேண்டும்.

இயேசுவின் ஜெபப்பள்ளியில் இயேசுபரன் நமக்கு இன்று கற்பிக்கும் பாடம் இதுவே "நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்பதே. 'நான் எனது ஆவியை ஏராளமாய் ஊற்றுவேன்' என்ற கடவுள் திருவாக்கிலும் 'நீங்கள் ஆவியால் நிரப்பப்படுங்கள்' என்ற பிரமாணத்திலும், கடவுள் எவ்வளவு அதிகமாக நமக்கு அருள்செய்ய ஆயத்தமாயிருக்கிறார் என்பதும, நாம் அடையும் ஒப்பற்ற பேறுகளும அடங்கியுள. கடவுள் சுதர் என்ற முறையில் எற்கனவே நாம் ஆவியைப் பெற்றிருக்கின்றோம். ஆயினும இன்னும அவரது விசேஷ வரப்பிரசாதங்களுக்காகவும, அவை நம்மில் கிரியை செய்யவும் நாம் வேண்டிக்கொள்வது அவசியமாயிருக்கிறது. இதுமட்டுமன்று, நம்மை முற்றும் அவரது சொந்தப் பொருளாக்கிக்கொள்ளவும், அவர் நமமை இடையறுது வழி நடத்தவும் வேண்டுகிறோம். எற்கனவே திராட்சைச் செடியின் தீஞ்சாற்றால் நிரப்பப்பட்ட சிறுகொடியானது நல்ல கனிகளைத் தருமாறு இன்னும் அதிகமான தீஞ்சாற்றினைப்பெற நாடுவது போலவே, விசுவாசியும் தனக்கு உரிமையாக்கிக்கொண்ட ஆவியின் பேறுகளுக்கு மேல், இன்னும் அதிகமதிகமாய்ப் பெற

ஆசிக்கிறுன். நாம் கற்றுக்கொள்ளும்படி நமது பரம சற்குரு விரும்புகிற பாடம் யாதெனில், கடவுள் திருவாக்கிலே, கடவுள் திருப்பிரமாணத்திலே, சிறிதும் குறையாத அளவிற்கு நமது எதிர் நோக்கலும் ஜெபமுமிருக்கவேண்டும் என்பதும் ஏராளமான ஆவியின் வரப்பிரசாதங்களால் நாம் நிரப்பப்பட வேண்டுமென்பதுமே யாகும்.

இதனை விசுவாசிப்போமாக. நாம் ஆவியால் நிரப்பப்படுமாறு ஜெபிக்கும்போது, நமது உணர்ச்சிகளால் கட்டுப்படுத்தப்படாதிருப்போமாக. சகல ஆவிக்குரிய ஆசிகளையும் பெற்றே தீரவேண்டும். அல்லது விசுவாசத்தோடு அவற்றை * எடுத்துக்கொள்ளவேண்டும். ஜெபிக்கும் சேயனுக்குத் தேவன் பரிசுத்த ஆவியை அருள்கிறுர் என்று நம்புக. இவ்விசுவாசத்தில் என்றும் வளர்க. நாம் கேட்பது கிடைக்கும் என்பதற்காதாரம் சத்திய வேதம். ஜெபம் கேட்கப்பட்டது என்று நன்றி கூறுக. பெற்றுக்கொண்டோம் என்றும், அதனை நம் சொந்தப் பொருளாக்கிக்கொண்டோம் என்றும் நன்றி கூறுக. ஏற்கனவே நாம் பெற்றுக்கொண்டதும், நாம் பெறுவோம் என்று விசுவாசிப்பதும் ஆகிய விசுவாசமுள்ள ஜெபத்தில் உறுதி கொள்க. அவ்விசுவாசம நம்மை முற்றும் நிரப்புமாறு இடம் தருக இத்தகைய விசுவாசத்திலும், நன்றி கூறும் ஜெபத்திலேயுமே நமது ஆன்மா பரிசுத்த ஆவியைப் பெற முடிகிறது. அத்தகைய ஜெபமானது, கேட்பது மட்டுமன்று; எதிர்பார்ப்பது மட்டுமன்று; ஆனுல் ஆசிகளைச் சொந்தமாக்குகிறது. சாஸ்வதமாய் வைத்துக் கொள்கிறது. முழு ஆசியையும் சுதந்தரித்துக்கொள்கிறது. நமது மீட்பர் இன்று நமக்குக் கற்பிக்கும் கீழ்க்கண்ட உன்னத போதனையை என்றும் நினைவு கூருவோமாக. உலகில் நாம் நிச்சயமாய், உறுதியாய் நம்பக்கூடிய ஒரே ஒரு காரியம் இருக்குமாளுல், அது, நாம் அவரது ஆவியால் நிரப்பப்படவேண்டுமென்பதும், அவரது ஆவியை நமக்கருள்வதில் அவர் அகமகிழ்கிறுர் என்பதுமேயாகும்.

நாம் இவ்வாறு ஒருமுறை விசுவாசிக்கக் கற்றுக்கொண்டால், நாம பரமண்டலத்தில் வைத்துள்ள பொக்கிஷத்திலிருந்து தினசரி ஒரு முறை பெற்றுக்கொள்ளப் பழகிவிட்டால், திருச்சபையின் மீதும், சருவ மக்கள் மீதும், தனி ஆட்கள்மீதும், விசேட முயற்சிகள் மீதும், சோனுமாரியாக ஆவியின் மழையைப் பெய்யுமாறு ஜெபிக்கும் வல்லமையும், உரிமையும் எவ்வளவு நமக்குண்டு என்பதை உணர்வோம். தன் காரியமாகப் பரம பிதாவை நெருங்கி ஜெபிக்கப் பழகிக்கொண்ட அடியான் ஒருவன், பிறர் காரியங்களுக்காகவும் ஜெபிக்கும் வல்லமையைப் பெற்றே தீர்வான். கேட்கிற

எவனுக்கும் பரமபிதா பரிசுத்த ஆவியை அருள்கிறார். ஆனால் பிறருக்காக வேண்டிக்கொள்ளும்போதோ பன்மடங்காக ஆவியை அருள்கின்றார் என்பதை அறிக.

---

* 'பெற்றுக்கொள்வது' 'எடுப்பது' என்று இரு சொற்களையும் குறிக்கும் கிரேக்க மொழி ஒன்றே. 'கேட்கிறவன் எவனும பெற்றுக் கொள்ளுகிறன்' என்று இயேசு சொன்னபோது, இராப்போஜனத்தில் பயன் படுத்திய 'எடுத்துப் புசியுங்கள்' என்ற சொல்லிலும் உயிர்த்த காலையில் பயன்படுத்திய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், ஒப்புக்கொள் ளுங்கள், எடுத்துக்கொள்ளுங்கள் என்ற சொற்களிலும் ஒரே வினைச் சொல்லை எடுத்தாளுகிறார் என்பது கவனிக்கத்தக்கது. பெற்றுக்கொள்ளு தல் என்பது, கடவுள் அருள்வதை மட்டுமன்று, நாம் ஒப்புக்கொள்வதையும் குறிக்கின்றது.

தென் இந்திய சபை கையாடவேண்டிய புதிய ஒழுங்கு.

"தென் இந்திய சபை எவ்விதமான ஒழுங்கில் வருங்காலத்தில் நடத்தப்படவேண்டும்" என்ற கேள்விதான், கடந்த ஜனுவரிமாசம் 12-ம் தேதி முதல் 15-ம் தேதி முடிய சென்னையில் நடந்த நான்காம் சினட் சங்கத்தில் ஆலோசிக்கப்பட்ட முக்கிய விஷயம். சினட் தலைவராகிய மகாகனம் ஏ. எம். ஹாலிஸ் அத்தியக்ஷர் மிகவும் திற மையாய் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்யும் பொதுக்கூட்டத்தை நடத்தினர். வந்திருந்த பிரதிநிதிகள் இவ்விஷயத்தைப்பற்றித் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள் எல்லாரும் வருங்கால சபை யானது வளர்ச்சியடையவேண்டுமானல் புதிய முறையைக்கையாட வேண்டுமென்று ஒப்புக்கொண்டனர். சிந்தித்த மூன்று விஷயங்கள்:

(1) சபை ஊழிய விஷயத்தில் எவ்விதமான புதுமுறை?

(2) பட்டம் பெற்றவர்கள், பட்டம் பெருதவர்கள் ஊழியம் என்ன?

(3) புறதேசத்திலிருந்து வரும் மிஷனேரிமாரையும், அனுப் பப்படும் பணத்தையும் எப்படி உபயோகிக்கலாம்?

மகாகனம் சுமித்திரா அத்தியக்ஷர் கூறியபடி, அயல் நாட்டி லிருந்து எப்பொழுதும் பணம் இந்திய சபை வாங்கிக்கொண்டே வருமானல் ஒருபோதும் இந்திய சபை சுய ஆட்சியுள்ள சபையாக முடியாது. மிஷனெரிமாருடைய சம்பளத்தையும், காலேஜ் ஸ்தாப னங்களுக்கு அனுப்பப்படும் பணத்தையும் நீக்கினலும் தற்காலத்தில் இந்திய சபைகளைக் கொண்டு நடத்துவதற்கு அயல் நாட்டிலிருந்து தென் இந்திய சபைக்கு வரும் பண உதவி 30 லட்சம் ரூபாய். இந்திய சபைகளை நடத்துவதற்கு இந்தியாவின் சபைகளிலிருந்து பிரிவாகும் தொகை 20 லட்சம் ரூபாய்.

வெளி நாட்டிலிருந்து இந்திய சபைகளை ஆதரிக்கும்படி அனுப்பப்படும் 30 லட்சம் ரூபாயையும் நிறுத்தும்படியாகத் தாய்ச்சபைகளைக் கேட்பது நல்லதல்லவா ? என்று மகாகனம் சுமித்திரா அத்தியக்ஷர் கேட்டார். சிலர் அப்படி நாம் தாய்ச் சபைகளைக் கேட்கக கூடாது என்றும்; வேறு சிலர், நாம் அப்படிக் கேட்டால்தான், இந்திய சபைகள் வளருவதற்கு உற்சாகம் கொடுக்கும் என்றும கூறினர் மகாகனம் ஹாரிஸ் அத்தியக்ஷர் வெளி நாட்டிலிருந்து வரும் பண உதவியைக் கொண்டு, வளர்ச்சியில்லாத சபைகளை நடத்தக் கூடாது என்று வற்புறுத்தினர். பொதுவாக எல்லாப் பிரதிநிதிகளும் சம்மதித்த விஷயம் ஒவ்வொரு இந்தியக் கிறிஸ்தவனும சுய ஆதரிப்பைப்பற்றி உணர்ச்சியுள்ளவனுயிருந்தால், சிறு சபைகளாயிருந்தாலும் அவைகள் உயிருள்ள சபைகளாயிருக்க முயற்சி செய்யும் என்பதே;

இந்திய ஆராதனை முறை. ஆராதனை முறையில் சர்வலோக திருச்சபையின் ஒருபாகமாயிருக்கும இந்திய சபை, இந்திய எண்ணத்தையும், சிந்தையையும வெளிப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. How can we express "under Indian conditions and Indian forms the spirit and thought and the life of the Church Universal"? நமது சபைகளில் ஆராதனை முறையை மிகவும் பயபக்தியாய் நடத்தும்படி வேண்டிய முயற்சி எடுக்கவேண்டும் என்றும். கீழ் தேசத்தார் எளிதில் அறியக்கூடிய விதமாய் புஸ்தகங்கள் எழுதப்படவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மகத்துவத்தைக் கல்வி கற்ற இதர மார்க்கத்தாரும அறியக்கூடிய பாஷையில் கிறிஸ்தவ தத்துவங்களை வெளியிடும் நூல்கள் தேவை.

அயல் நாட்டு மிஷனேரிமாரையும், பணத்தையும் எவ்விதம் உபயோகிக்கலாம் ? அயல் நாட்டு மிஷனெரிமார் இந்திய சபைக்குத் தேவை ஆனல் எவ்விதமான ஊழியம் அவர்கள் இந்திய சபைக்குச் செய்யவேண்டுமென்று ஆராய்ச்சி செய்யவேண்டும் இந்தியத் தலைவர்களை பயிற்றுவிக்கும் ஊழியத்தில் அவர்கள் அதிகமாய்த தங்களைத் தத்தம் செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. மிஷனெரிமார் இந்திய சபையில் எவ்விதம் ஊழியம செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யுமபடிக்கு ஒரு கமிற்றி ஏற படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அயல் நாடுகளிலிருந்து அனுப்பப்படும் பண உதவியை எவ்விதம் செலவிடலாம என்று ஆராய்ச்சி செய்ய ஒரு கமிற்றி ஏற்படுத்தப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

சம்பளமில்லாத போதகர். இதற்குமுன் நம் சபைகளிலில்லாத ஒரு ஒழுங்கு, அவசியமாயுள்ள சில இடங்களிலாவது கொண்டு

நடத்துவது நல்லது என்று சினட் சங்கம் சம்மதித்தது. அதாவது சம்பளமில்லாத போதகன்மாரை, அவசியமான கிராமச் சபைகளில் ஏற்படுத்துவது இது சில வருஷங்களாக சினட் சங்கம் ஆலோசித்த விஷயம். கிராமச் சபைகளில், இராப்போஜனம், ஞானஸ்நானம், ஒய்வுநாள் ஆராதனை முதலியவற்றை நடத்தும்படியாக, சிலகாலம் பயிற்சிபெற்ற சிலரைப் போதகாபிஷேகம் செய்யலாம் என்று சினட் மினிஸ்டீரியல் கமிட்டியார் கொண்டுவந்த சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது. அவ்வாறு மதுரை அத்தியட்சாதீனத்தைச்சேர்ந்த சில கிராமச் சபைகளில், சில சம்பளமில்லாத போதகர்கள் நியமிக்கப்படுவார்கள். கவர்ண்மென்று உத்தியோகத்திலிருந்து பென்ஷன் பெற்ற சிலர் போதக பட்டம் பெற்று சம்பளமில்லாமல் நல்ல ஊழியம் செய்து வருகிறார்கள்.

கிராமச் சபைகளில், சம்பளம் பெறுமல் போதக ஊழியம் செய்ய சிலர் முன்னுக்கு வருவது நல்லது. ஏனென்றால் தற்காலத்தில் சம்பளம் பெற்றுவரும் போதகன்மார் மிகவும் குறைவாயிருப்பதினால் 2, 3 மாசங்களுக்கு 1 முறை மாத்திரம் போதகர் சபைகளை சந்தித்து ஞானஸ்நானம் திருவிருந்து நடத்தக்கூடும். ஒவ்வொரு சபைக்கும் ஒரு போதகர் வைத்துக்கொள்ள முடியாததாகையால் இந்த ஒழுங்கு நல்லது என்று பொதுவாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த முறை நல்லதல்ல என்றும் சிலர் தர்க்கித்தார்கள். மதுரை அத்தியக்ஷாதீனத்தில் எப்படி இது சித்தியாய் நடைபெறுகிறது என்று பார்க்கலாம்.

(— தேசோபகாரி)

கி. மு. சங்கப் பொருட்கள்—மே, 1954.

கிறிஸ்தவ இல்லம்.

மே 1. இல்லத்தைப்பற்றி கிறிஸ்தவ மனப்பான்மை— எபே. 4 : 29-32

2. எப்படி வீட்டில் ஆராதிப்பது? — 2 தீமோ. 3 : 14-17

திருப்பணிக்காகப் பிரதிஷ்டை — சரீரம், கண், காது, நாவு.

3. பராக்கிரமசாலியைப்போல் மகிழ்ச்சியாயிரு—சங் 19:1-5
4 உன் சரீரம் பரிசுத்தமுள்ளது— 1 கொரி. 3 : 16-17
5. உன் சரீரம் கடவுளுக்குரியது— 1 கொரி. 6 : 19-20
6. கண் உன் சரீரத்தின் விளக்கு— மத் 6 : 22
7. ஞானியின் செவிகள்— நீதி. 18 : 13-16
8. இனிய நாவு எலும்பையும நொறுக்கும்— நீதி. 25 : 15-18
9. அருவருப்பானவற்றை விட்டுவிடுங்கள்—கொலோ. 3 :8-9

திருப்பணிக்காகப் பிரதிஷ்டை — கைகள், பாதங்கள்.

10. இடறல் உண்டாக்கும் கை— மாற்கு 9 : 42-43
11. சுத்தமுள்ள கைகள் — சங். 24
12. அவன் கைகளை திடப்படுத்தினார்கள்—நெகே. 2 : 17-18
13. உறுதியான வழுவாத கால்கள் — சங். 18 : 32-36
14. இயேசுவின் பாதத்தில் — லூக்கா 10 : 38—42
15. சுத்தமுள்ள கால்கள்— யோவான் 13 : 2-9
16. அழகான பாதங்கள்— ரோமர் 10 : 14-17

திருப்பணிக்காகப் பிரதிஷ்டை

17. ஆராயும் இருதயம்— சங். 139 : 19-24
18. திடப்படுத்தப்பட்ட இருதயம் — சங். 27 : 11-14
19. நவமான இருதயம் — எரே. 24 : 5-7
20. நொறுங்குண்ட இருதயம்— சங். 34 : 15-19
21. ஆவியின் ஒருமைப்பாட்டைக் காக்க முயற்சி செய்— எபே. 4 : 1-13
22. வைராக்கியமும் விரோதமும் கலகமாய் முடியும்— யாக். 3 : 13-18
23. உழைப்பில் ஒற்றுமை சபையை ஐக்கியப்படுத்தும்— 1 கொ. 1 : 10-13

சபைக்கு கி. மு சங்கம் எப்படிப் பணியாற்றலாம்?

24. கிறிஸ்துவால் ஸ்தாபிதமாகுதல்— லூக்கா 24 : 45-49
25. கிறிஸ்துவால் நேசிக்கப்படல் — யோவா. 15 : 12-21
26. கிறிஸ்துவால் சுத்திகரிக்கப்படல்— எபே. 5 : 25-27
27. கிறிஸ்துவால் காக்கப்படல் — 1 பேதுரு 1 : 5 ; (யோவான் 17 : 10-17)
28 கிறிஸ்துவால் பெலன் பெறல் — யோவான் 15 :1-5
29. கிறிஸ்துவால் உபயோகிக்கப்படல்—அப். 2 : 4-8
30. கிறிஸ்துவால் மகிமையாக்கப்படல்—வெளி. 21 : 1-7
31. உயிருள்ளவர்களைத் தெரிந்தெடுத்தல்—லூக்கா 5 : 10

பசுமலை வேதப்பாடசாலையில் சேரும் விதிகள்.

1 மூன்று வகையான பயிற்சிகள் இங்குண்டு :—

(1) **உபதேசிமார் வகுப்பு** போதனாமுறைப் பயிற்சி பெற்ற சபை ஊழியத்தில் அனுபவம் வாய்ந்தவருக்காக இரண்டு வருஷப் பயிற்சி.

(2) **சுவிசேஷகர் வகுப்பு** சபை ஊழியம், சுவிசேஷ ஊழியம் செய்துவரும் அனுபவம் வாய்ந்தவருக்காக ஒரு வருஷப் பயிற்சி.

(3) **வேதாகம ஸ்திரீகள் வகுப்பு** 8-ம் வகுப்பு தேறியிருக்க வேண்டும். குறைந்த படிப்புள்ளவர்களும் அவரவர் பொர்சுக்கும் திறமைக்கும் அனுபவத்திற்கும் தகுந்தபடி தெரிந்தெடுக்கப்படுவார்கள்

2. வேதப்பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள் ஒவ்வொரு மாணவரும் தங்கள் நடத்தை, திறமை இவற்றில் தேர்ச்சி காண்பித்தாலொழிய காயமாய் ஏற்கப்பட மாட்டார்கள்

3 பின்வரும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும் :—

போதனாமுறைப் பயிற்சி இல்லாத	தனி மாணவர்	ரூ 20
,, உள்ள	,,	ரூ 25
,, இல்லாத	குடும்பஸ்தர்	ரூ. 50
,, உள்ள	,,	ரூ. 60

4. மாணவரை அனுப்பிவைக்கும் அத்தியட்சாதீனம் அவர்களுடைய முழுச் செலவையும் ஒப்புக்கொள்ளும்.

5. வேதப் பாடசாலையில் சேர விரும்பும் மாணவர் தங்கள் விண்ணப்ப மனுவை ஜூன்மீ 1உக்குள் அனுப்ப வேண்டும். ஜூலைமீ 1உ போல் பள்ளிக்கூட வேலை ஆரம்பிக்கும்

மற்ற விவரம் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம் :—

தலைவர்,
வேதப்பாடசாலை,
பசுமலை, மதுரை ஜில்லா.

அத்தியட்சாதீன புஸ்தக டிப்போ.

இதனால் மதுரை-ராம்நாதபுரம் டயோசிஸைச் சேர்ந்த எல்லா மிஷன் உத்தியோகஸ்தர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் ஷை டயோசிசன் டிப்போ கவர்னிங் போர்டு மீட்டிங்கில் டிப்போ மானேஜர் அவர்களை 1954-ம் வருஷம் மேமீ முதல் இரண்டு வாரங்களுக்கு யூனிட் அதிகாரிகள் இருக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் நேரில்சென்று டிப்போ அபிவிருத்திக்கென்று ஷை அதிகாரிகளுக்கு வேண்டிய புஸ்தகங்களுக்கும், நோட்டு புஸ்தகங்களுக்கும் மற்றும் இதர ஸ்டேஷனரி சாமான்களுக்கும் நேரில் ஆர்டர் பெற்றுவருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தப்படி அவர்களும் எல்லா யூனிட்களுக்கும் நேரில் விஜயம் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் தயவுசெய்து யூனிட் அதிகாரிகள் இப்போதிருந்தே தங்களுடைய யூனிட்டிலுள்ள கல்விச்சாலைகளுக்கு வேண்டிய நோட்டு புஸ்தகங்கள், புஸ்தகங்கள் மற்றும் ஸ்டேஷனரிசாமான்கள் முதலியவற்றிற்கு கணக்கெடுத்து வைத்துக்கொண்டு ஷை மானேஜர் அவர்கள் வரும்போது தாமதமன்னியில் கொடுத்துவிட்டீர்களானால் உடனுக்குடனே உங்கள் வேலைகளை முடித்து பள்ளிக்கூடங்கள் 1954-55-க்கு துவங்குவதற்கு முன்னமே உங்களுக்கு வேண்டியவைகளை சீக்கிரத்தில் அனுப்பிவைக்க வசதியாயிருக்கும். இந்த வருஷத்திலாகிலும் நம்முடைய டையோசிஸிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் தங்களுக்கு வேண்டிய எல்லா நோட்டுப் புஸ்தகங்கள், புஸ்தகங்கள் மற்றும் ஸ்டேஷனரி சாமான்கள் முதலியவைகளை டிப்போ மூலம் வாங்கி நம்முடைய டிப்போவை ஓங்கி வளரச் செய்வார்களென்று கவர்னிங்போர்டார் பூரணமாய் நம்புகிறார்கள்.

ரூ. 5 விலையுள்ள தமிழ் வேதாகமம் இப்போது இங்கு வந்துள்ளன. வேண்டியவர்கள் வாங்கிக்கோள்ளலாம்.

கோடைக்கானல்,
24—4—54.

லாயட் லார்பியர்,
சூப்பரின்டெண்டு,
டயோசிசன் டிப்போ.

Lenox Press, Pasumalai, 18—5—1954. 420 C.